TNPSC பொதுத்தமிழ்
புதிய பாடத்திட்டம்

# தேர்வுக் கையேடு

## தமிழ் பகுதி II

இலக்கியம்

## எழுத்தும் ஆக்கமும்

ஜி.மூர்த்தி

TNPSC பொதுத்தமிழ்
புதிய பாடத்திட்டம்

# தமிழ் இலக்கிய வரலாறு

## பகுதி-ஆ

## எழுத்தும் ஆக்கமும்

ஜி.மூர்த்தி

தமிழ் இலக்கிய வரலாறு

# பகுதி–ஆ

# (இலக்கியம்)

# இயல்–1

## 1. பதினெண் கீழ்கணக்கு அற நூல்கள்

### 1. திருக்குறள்

- திருக்குறள் பதினெென் கீழ்கணக்கு நூல்களில் ஒன்று.
  "நாலடி நாண்மணி நாநாற்பது ஐந்திணை
  முப்பால் கடுங்கொவை பழமொழி மாமூலம்
  இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
  கைந்நிலைய வாங்கீழ்கணக்கு."

  "அடி நிமிர் பில்லா செய்யுட் டொகுதி
  அறம் பொருளின்பம் அடுக்கி–யவ்வகை
  திறம்பட வுரைப்பது கீழ்கணக்காகும்"
  -பன்னிரு பாட்டியல்

  பதினெென் கீழ்கணக்கு நூல்களின் அடி அளவு 2முதல் 6வரை ஆகும். எட்டுத்தொகை மற்றும் பத்துபாட்டை விட செய்யுள் வடிவில் சிறியது இதனால் இவற்றை "கீழ்கணக்கு" நூல் என அழைக்கிறோம்.
  பதினெென் கீழ்கணக்கு–7
- சங்கம் மருவிய காலத்து(கி.பி 200-600)நூல். காலம் கி.பி–2ம் நூற்றாண்டு நீதிநூல்காலம் ஆகும்.
- இருண்டகாலம் கிபி 3 நூற்றாண்டு ஆகும்.(களப்பிரர்கள் மொழி–பாலி,பல்லவர்கள் மொழி–பிராகிருதம்)
- பதினெென் கீழ்கணக்கு நூல்களில்–
  அறநூல்கள்–11,அகநூல்கள்–6,புறநூல்–1களவழிநாற்பது.
- அறநூல்களில் முதன்மையானது திருக்குறள்.
- திருக்குறளுக்கு அடுத்தபடியாக "நாலடியார்" மற்றும் பழமொழிநானூறு உள்ளது.
- "நாலடியார்" திருக்குறளின் விளக்கம் என்று கூறுவர்.
- "நாலடியார்" வோளான்வேதம் என்று அழைக்கப்படும்.
- மேன்மை பொருந்திய இரண்டடி (1¾அடி) குறள் வெண்பாக்களால் ஆனது.
- அறம்,பொருள்,இன்பம் என்ற உறுதிப்பொருட்களை பற்றிக் கூறுகிறது.
- பால்(3),இயல்(9),அதிகாரம்(133), என்று பிரிக்கப்பட்டுள்ளது.

❖ <u>முப்பால்:-</u>
அறத்துப்பால்,பொருட்பால்,இன்பத்துப்பால்(அ)காமத்துப்பால்.

❖ <u>அறத்துப்பால் - இயல்:-</u>
1.பாயிரவியல்,2.இல்லறவியல்,3.துறவறவியல்,4.ஊழியல்.

❖ <u>பொருட்பால் - இயல்:-</u>
5.அரசியல்,6.அங்கவியல்,7.ஒழிபியல்.

❖ <u>இன்பத்துப்பால்(அ)காமத்துப்பால்- இயல்:-</u>
8.களவியல்,9.கற்பியல்

❖ <u>அதிகாரம்.</u>

❖ அறம்-38அதிகாரம்,இயல்-4(பாயிரவியல்-4அதிகாரம், இல்லறவியல்-20அதிகாரம்,துறவறவியல்-13அதிகாரம், ஊழியல்-1 அதிகாரம்)

❖ பொருள்-70அதிகாரம்.இயல்-3(அரசியல்-25 அதிகாரம்,அங்கவியல்-32 அதிகாரம்,ஒழிபியல்-18 அதிகாரம்.

❖ இன்பம்-25 அதிகாரம்.இயல்-2(களவியல்-7,கற்பியல்-18)

❖ அறம்,பொருள்- ஆசிரியர் கூற்றாகவும்.இன்பம்-மாந்தர் கூற்றாகவும் உள்ளது.

❖ நீதிநூல்களில் காலத்தால் முற்பட்டது திருக்குறள் ஆகும்.

## 2. <u>திருக்குறளின் சிறப்புகள்</u> :-

❖ திருக்குறள் "அ" கரத்தில் தொடங்கி (**அ**கர முதல) "ன"கரத்தில் (1330-வது குறள் "கூடி முயங்கப்பெறி**ன்**")முடிகிறது.

❖ திருக்குறளின் பெருமை பற்றி-திருவள்ளுவமாலை அழகாக கூறுகிறது.

❖ தமிழுக்கு "கதி"திருக்குறளும் கம்பராமாயனமும்.

❖ "தமிழ் மாதின் இனிய உயர்நிலை" என சிறப்பிக்கப்படுகிறது.

❖ திருக்குறள் உலகில்107 மொழிகளில்-மொழிபெயர்ப்பு(குஜராத்தியில் மொழிபெயர்ப்பு செய்தவர்-கோகிலா)

❖ இது ஒரு "வழிகாட்டி நூல்" என்றழைக்கப்படுகிறது.

❖ திருக்குறளின் வேறுபெயர்கள்:-
1.உத்திரவேதம்
2.தெய்வநூல்
3.வாயுரை வாழ்த்து
4.பொய்யாமொழி
5.தமிழ்மறை
6.பொதுமறை
7.திருவள்ளுவப்பயன்

8.முதுமொழி
9.முப்பால்
10.பொருளுரை

- திருக்குறளுக்கு உரை கண்டவர்கள்:-

1.தருமர்
2.மணக்குடவர்(முதல் உரை) கிடைக்கப்பெற்றது.)
3.தாமத்தர்
4.நச்சர்
5.பரிதியார்(உரை கிடைக்கப்பெற்றது.)
6.பரிமேலழகர்-(உரை கிடைக்கப்பெற்றது.)
("பதித்த உரையெல்லாம், பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளின்-சிறப்புபாயிரம்)
7.திருமலையர்
8.மள்ளர்
9.காளிங்கர்.(உரை கிடைக்கப்பெற்றது.)
10.பரிபெருமாள்

- திருக்குறள் மொழிபெயர்ப்பு:-

ஆங்கிலம்-ஜி.யு.போப்
ஆங்கிலம்-K.M.பாலசுப்பிரமணியன்(இந்தியர்)
பிரெஞ்சு –ஏரியல்
ஜெர்மன்-கிரால்
லத்தீன்-வீரமாமுனிவர்.
வடமொழி-அப்பாதீட்சிதர்.
ஹிந்தி-பி.டி.ஜெயின்
தெலுங்கு-வைத்தியநாத பிள்ளை

- பதிப்பு

1812-மலையத்து வாசன் மகன்-ஞானபிரகாசம் தஞ்சையில் பதிப்பித்து வெளியிட்டார்.
பரிமேலழகர்-உரையுடன் பதிப்பித்தவர்-1840-ராமானுஜ கவிராயர்.

## 3. திருக்குறளின் பெருமைகள்:-

- ஔவையார்:-

"அணுவை துளைத்தேழ் கடலை புகட்டி குறுகதரித்த குறள்"

- கபிலர்:-

"தினையளவு போதா சிறுபுல் நீர் நீண்ட
பணையளவு காட்டும் படித்தால்."

திருவள்ளுவமாலை 55பாடல்கள் உள்ளது53 புலவர்கள் பாடியுள்ளனர்.

தமிழ் இலக்கிய வரலாறு

- **பரணர்:-**

“வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையகத்தார்
உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து.”

- **தேனிக்குடிகீரனார்:-**

“பொய்பால பொய்யேயாய் போயின பொய்யல்லாத
மெய்பால மெய்யாய் விளங்கினவே முப்பால்
தெய்வத்திரு வள்ளுவ செய் திருக்குறளால்
வையத்து வாழ்வார் மனத்து.”

- **பாரதியார்:-**

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து-வான்புகழ்
கொண்ட தமிழ்நாடு.”
“யாம்கண்ட புலவர்களில் பூமிதனில்வள்ளுவனைப்போல்
கண்டதில்லை”

- **பாரதிதாசன்:-**

“வள்ளுவனை பெற்றதனால் பெற்றதே புகழ் வையகமே”
“இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே”

- **கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை:-**

“புத்தகம் நூறு புரட்டி களைப்புற்று சித்தம் கலங்கி
திகைப்பதேன்-வித்தகன்
தெய்வபுலவர் திருவள்ளுவர் சொன்ன பொய்யில்
மொழி இருக்கும் போது.”
“செந்தமிழ் செல்வ திருக்குறளை நெஞ்சமே சிந்தனை
செய்வாய் தினம்-நீதி திருக்குறளை நெஞ்சார தம்
வாழ்வில் ஓதித்தொழுது எழுக ஓர்ந்து.”

- **திரு.வி.க:-**

“திருக்குறள் ஒரு வகுப்பினருக்கோ, ஒரு மதத்திற்கோ
அல்ல”

- **கீ.ஆ.பெ:-(தமிழ் இனம் 154 நாடுகளில் பரவி உள்ளது)**

“திருவள்ளுவன் தோன்றவில்லையெனில் உலகத்திற்கு
தமிழ் இனம் இருப்பது தெரியாது.”
திருக்குறள் எழுதவில்லையென்றால் உலகத்திற்கு தமிழ்
மொழி இருப்பது தெரியாது.”

## 4. திருக்குறள் மேற்கோள்கள்:-

- அறத்தான் வருவதே இன்பம்
- மணத்துக்கண் மாசிலள் ஆகுதல்
- ஊழி பெருவளி யாவுள
- முயற்சி திருவனையாக்கும்
- பெண்ணிற் பெருந்தக்க யாவுள

❖ <u>பரணர்:-</u>

"வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையகத்தார்
உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து."

❖ <u>தேனிக்குடிகீரனார்:-</u>

"பொய்பால பொய்யேயாய் போயின பொய்யல்லாத
மெய்பால மெய்யாய் விளங்கினவே முப்பால்
தெய்வத்திரு வள்ளுவ செய் திருக்குறளால்
வையத்து வாழ்வார் மனத்து."

❖ <u>பாரதியார்:-</u>

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து-வான்புகழ்
கொண்ட தமிழ்நாடு."

"யாம்கண்ட புலவர்களில் பூமிதனில்வள்ளுவனைப்போல்
கண்டதில்லை"

❖ <u>பாரதிதாசன்:-</u>

"வள்ளுவனை பெற்றதனால் பெற்றதே புகழ் வையகமே"

"இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே"

❖ <u>கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை:-</u>

"புத்தகம் நூறு புரட்டி களைப்புற்று சித்தம் கலங்கி
திகைப்பதேன்-வித்தகன்
தெய்வபுலவர் திருவள்ளுவர் சொன்ன பொய்யில்
மொழி இருக்கும் போது."

"செந்தமிழ் செல்வ திருக்குறளை நெஞ்சமே சிந்தனை
செய்வாய் தினம்-நீதி திருக்குறளை நெஞ்சார தம்
வாழ்வில் ஓதித்தொழுது எழுக ஓர்ந்து."

❖ <u>திரு.வி.க:-</u>

"திருக்குறள் ஒரு வகுப்பினருக்கோ, ஒரு மதத்திற்கோ
அல்ல"

❖ <u>கீ.ஆ.பெ:-(தமிழ் இனம் 154 நாடுகளில் பரவி உள்ளது)</u>

"திருவள்ளுவன் தோன்றவில்லையெனில் உலகத்திற்கு
தமிழ் இனம் இருப்பது தெரியாது."

திருக்குறள் எழுதவில்லையென்றால் உலகத்திற்கு தமிழ்
மொழி இருப்பது தெரியாது."

## 4. <u>திருக்குறள் மேற்கோள்கள்:-</u>

❖ அறத்தான் வருவதே இன்பம்

❖ மணத்துக்கண் மாசிலள் ஆகுதல்

❖ ஊழி பெருவளி யாவுள

❖ முயற்சி திருவனையாக்கும்

❖ பெண்ணிற் பெருந்தக்க யாவுள

தமிழ் இலக்கிய வரலாறு

✓ இந்நூல் கூதிர் பாசறை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இயல்-5

## 5.(அ)சிலப்பதிகாரம்

**"காதொளிரும் குண்டலமும் கைக்குவளையா பதியும்
கருணைமார்பின் மீதொளிர் சிந்தாமணியும்
மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பபோது
ஒளிரும் திருவடியும்." – கவியோகி சுத்தானந்த பாரதி.**

- காலம் கி.பி 2-ம் நூற்றாண்டு.
- ஆசிரியர்-சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள்.
- தண்டமிழ் ஆசான்-மதுரை கூல வாணிகன் சீத்தலை சாத்தனார் கூற இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.
- தந்தை-இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,தாய்-நற்சோணை.
- இவர் சமனத்தறவி இது சமணகாப்பியம்.
- தமிழில் தோன்றிய முதல் காப்பியம்.
- அணிகலன் பெயரில் அமைந்த காப்பியம்.
- "முதற்காப்பியம்,முத்தமிழ் காப்பியம்,குடிமக்கள் காப்பியம், புரட்சிகாப்பியம்,ஒற்றுமை காப்பியம்,நாடக காப்பியம், மூவேந்தர் காப்பியம்,தேசிய காப்பியம்,வரலாற்று காப்பியம், தனித்தமிழ் காப்பியம்,புதுமைக் காப்பியம்,பொதுமைக் காப்பியம்,உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்," என அழைக்கப்படுகிறது.
- காப்பியம்-"தொடர்நிலைச் செய்யுள்"எனவும் வழங்கப்பெறும்.
- சிலப்பதிகாரமும் ,மணிமேகலையும் இரட்டை காப்பியம்ஆகும்.
- "இசை நாடகமே" சிலப்பதிகார கதையின் உருவம்.
- இலக்கணம்,மொழிமரபுகள்,இறுதியில் பேரிலக்கியம் பற்றி கூறுவது காப்பியம் ஆகும்.
- மூன்று காண்டங்கள்-30 காதைகள் உள்ளது.
- "புகார்க் காண்டம்-மங்கல வாழ்த்து முதல் நாடுகாண் காதை வரை 10-காதைகள் கொண்டது.
- மதுரைக் காண்டம்-காடுகாண் காதை முதல், கட்டுரை காதை வரை 13-காதைகள் கொண்டது.
வஞ்சிக்காண்டம்- குன்றக்குரவை தொடங்கி,வரந்தரு காதை முடிய 7-காதைகள் கொண்டது.

<u>மாணிக்கவாசகர்</u>( சற்குரு மார்க்கம்(அ)சன்மார்க்கம்–ஞானம்) 32–வயதில்இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்.

- மதுரை திருவாதவூரில் பிறந்தவர்.
- பெற்றோர் – சம்புபாத சாரியர்.
- காலம் 9ம் நூற்றாண்டு.
- "அழுது அடியடைந்த அன்பர்" எனப்படுவார்.
- அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தார்.
- இவர் பாடியது திருவாசகம் (658) பாடல்கள் மற்றும் திருக்கோவை.
- இவர் பாடிய "திருவெம்பாவை" மார்கழி மாதத்தில் பாடப்படும்.
- பாவை பாடிய வாயால் கோவை பாடுக என இறைவன் கேட்க 'திருக்கோவை"அல்லது திருச்சிற்றம்பலகோவை பாடினார்.
- இவர் கட்டிய கோயில் ஆவுடையார் கோயில். திருப்பெருந்துறையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது.
- சைவ வழிப்பாட்டின் போது பாடுவது திருவகவல்.
- அந்தி மத்தில் பாடுவது சிவப்புராணம்.
- இளங்கோவடிகளுக்கு பிறகு நாட்டுபுறப்பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.
- ஆரணம், ஏரணம், காமநூல் , எழுத்து என்பன திருக்கோவையின் வேறு பெயர்கள்.
- ஆரணர் என்பது அந்தணரின் வேதம்.
- ஏரணம் என்பது யோகியரின் ஆமத்தின் காரணம்.
- காமுகர் பாடுவது காமநூல்.
- திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசக்த்திற்கும் ஒருகார்.
- நமச்சிவாயம் வாழ்க., நாதம்தாள் வாழ்க – சிவப்புராணத்தின் தொடக்கம்.
- ஆதியும் ,அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி – திருவெம்பாவின் தொடக்கம்.
- 'திருவாசகம் ஒருகால்ஓதின் கருங்கல் மனமும் கசிந்துருகும் '– நால்வர் நாண்மணிமாலை.
- "வான் கலந்த மாணிக்கவாசகர் நின் வாசகத்தை
  நான் கலந்து பாடும் கால் நற்கருஞ்சாறுனிலே
  தேன் கலந்து பால் கலந்து செழுங்கனி
  ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல்
  இனிப்பதுவே." – இராமலிங்க அடிகள்.
- "சைவ வேதம்" எனப்படும் திருவாசகத்தை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்தார்.